# சட்ட ஆய்வு கட்டுரைக்கான அழைப்பு

சட்ட வல்லுநர்கள் தங்கள் கருத்துகளை வெளிக் கொண்டு வரும் ஒரு தளத்தை வழங்கும் நோக்கத்துடன், தொடங்கப்பட்டது தான் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழக தமிழ் ஆய்விதழ். இவ்விதழ், அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின் வருடாந்திர சகமகதிப்பாய்வு இதழாகும். இந்த தமிழ் ஆய்விதழ் மாணவர்கள், கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் நீதியரசர்கள் ஆகியோரிடமிருந்து தரமான சட்ட ஆய்வு கட்டுரைகள் வரவேற்க்கப்படுகின்றன. இந்த இதழின் ஒவ்வொரு பதிப்பும் சமக்கால சட்ட சிக்கல்களைப் பற்றி விவாதிக்கும் தளமாக விளங்கும். இதில் ஆசிரியர் குழு கட்டுரைகள், குறிப்புகள் மற்றும் புத்தக மதிப்புரைகள் வடிவில், 2022-2023 இதழில் வெளியிடுவதற்கு, வெளியிடப்படாத ஆய்வு கட்டுரைகளை அழைப்பதில் மகிழ்ச்சி அடைகிறது. ஆய்வு கட்டுரைகள் சமக்கால சமூக சட்ட சிக்கல்கள் மற்றும் சட்டத்தின் பிற பகுதிகளுடனான அதன் தொடர்பைப்பற்றியதாக இருக்க வேண்டும். சமர்பிப்புகளுக்கான சுருக்கம் ஆகஸ்ட் 29 ம் தேதிக்குள் அனுப்பட வேண்டும். அனைத்து சமர்ப்பிப்புகளுக்கான காலக்கேடு செப்டெம்பர் 10 ஆகும். சுருக்கம் இல்லாத சமர்ப்பிப்புகள் வெளியீடப்படாது. சமர்பிப்புகள் செப்டெம்பர் 2வது வாரத்திற்குள் வெளியிடப்படும். பங்களிப்புகள் அசல் மற்றும் பிரத்தியேகமாக இருக்க வேண்டும். அவற்றை மறுபரிசீலனை செய்யவோ அல்லது பிற இடங்களுக்கு வெளியிடவோ அனுப்பக் கூடாது. அனைத்து கையெழுத்து பிரதிகளும், எடிட்டோரியல் போர்டு மற்றும் சகக் குழுவின் மதிப்பாய்வுக்கு உட்பட்டவை என்பதால் வெறும்படைப்பை சமர்ப்பிப்பது வெளியீட்டிற்கு உத்திரவாதம் அளிக்காது. சமர்ப்பிக்கப்பட்ட கையெழுத்து பிரதிகளை ஆய்வு செய்தல், தேர்வு செய்தல் மற்றும் வெளியிடுதல் ஆகியவைகளை ஆசிரியர் குழு முடிவு செய்யும். பங்களிப்புகள் மேற்கூறிய கட்டமைப்பிற்குள் கண்டிப்பாக இருக்க வேண்டும்.

அறிவுறுத்தல்கள்:

1. கட்டுரைகள் 4000-5000 வார்த்தைகள் வரை இருக்கலாம்.
2. கட்டுரைகள் 2000 வார்த்தைகளிலும் இருக்கலாம்
3. குறிப்புகள், கருத்துக்ள மற்றும் மதிப்புரைகள் 1000-2000 வார்த்தைகளுக்குள் இருக்கலாம்.
4. வார்த்தை எண்ணிக்கை என்பது அடிக்குறிப்புகளுக்கு பிரத்தியேகமானது.
5. நீண்ட சமர்ப்பிப்புகள் தலையங்கத்தின் விருப்பப்படி பரிசீலிக்கப்டும்.
6. கட்டுரைகள் Times New Roman, 12 pt. யிலும் மற்றும் 1.5 line spacing இல் தட்டச்சு செய்யப்பட வேண்டும். இடைவெளிகள் 1.0 யில் இருக்க வேண்டும். **பாமினி** எழுத்துருவில் தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
7. அனைத்து சமர்ப்பிப்புகளுக்கும் 300 வார்த்தைகளுக்கு மிகாமல் ஒரு சுருக்கம் இருக்க வேண்டும் மற்றும் ஐந்து அல்லது ஆறு முக்கிய வார்த்தைகள் இருக்க வேண்டும்.
8. அதிகபட்சம் இரண்டு எழுத்தாளர்களுக்கு இணை ஆசிரியர் அனுமதிக்கப்படும்.

9. சமர்ப்பிப்புகள் பின்வருவனவற்றை உள்ளடக்கிய ஒரு சுருக்கமான குறிப்புடன் இருக்க வேண்டும். தகவல்:
    - பெயர்
    - படிப்பு (என்றால் பொருந்தும்)
    - கல்வி ஆண்டு
10. அனைத்து சமர்ப்பிப்புகளும் மின்னணு வடிவில் செய்யப்பட வேண்டும். மேலும் அனுப்பப்பட வேண்டிய மின்னஞ்சல் முகவரி tndalualuj@gmail.com. செப்டெம்பர் 10, 2022 அன்று அல்லது அதற்கு முன் சமர்ப்பிப்புகள் பெறப்படும். உரிய தேதிக்குப் பிறகு இந்த இதழில் வெளியிடுவதற்கு பரிசீலிக்கப்படாது.
11. நிறைவுப் பெற்ற கட்டுரைகள் tndalutamiljournal@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்ப வேண்டும்.